# மான்மின் செய்திகள்
# Manmin News


Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com

# “மான்மின் துதிகளின் 9வது ஆண்டுவிழாவிற்கு வாழ்த்துக்கள்”

## மான்மின் துதிகள் 11 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, உலகமெங்கிலும் விநியோகிக்கப்படுகிறது

உபாகமம் 31ம் அதிகாரத்தில் உள்ளபடி, தேவன் இஸ்ரவேல் புத்திரர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்தையும், தேவனுடைய அன்பின் கிரியைகளையும் மறந்துவிடாதபடிக்கு, மோசே ஒரு பாடலை எழுதி, அவர்களுக்கு கற்றுக் கொடுக்கும்படி வழி நடத்தினார்.

இன்றைய நாட்களில், உலகமெங்கும் பாவமும் தீமையும் பரவியிருப்பதால், தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற துதிகள் கிறிஸ்தவர்களுக்கு மிகவும் தேவைப்படுகிறது. தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ இந்த தேவையை நன்கு அறிந்திருந்தார்; அதனால் ஊக்கமான ஜெபத்தை ஏறெடுத்தார். அதற்குப் பதிலாக, அன்பின் தேவன் தாமே அழகான ராகங்களையும், பாடல் வரிகளையும் தந்தருளிக் கொண்டு வருகிறார்.

முதலாவது பாடல், “ஆண்டவரின் அறிக்கை” ஏப்ரல் 3, 2009 அன்று கொடுக்கப்பட்டது. இன்று தேவன் தந்த பாடல்களின் எண்ணிக்கை 345 ஆக உயர்ந்துள்ளது. பாலினம் வயது இவைகளை –யெல்லாம் தாண்டி எவரும் எளிதில் கற்றுக்கொள்ளும்வண்ணம் பாடல்கள் உள்ளன. ஒரு சிறிய பாடலிலும், இசையின் பல்வேறு காரணிகள் உள்ளன.

ஆங்கிலம் சீனம் உட்பட 11 மொழிகளில் பாடல்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. கூடுதலாக, அநேக அயல்நாட்டு விசுவாசிகள் கொரிய மொழியில் பாடல்களை பாடுகிறபோது, அதிக கிருபையையும் உணர்வுகளையும் பெற்றுக்கொள்வதாக கூறி, கொரிய மொழியில் பாடல்களை கற்றுக்கொள்கின்றனர். உலகமெங்கிலும் உள்ள மான்மின் அங்கத்தினர்களை அதிக நெருக்கமாக இணைக்கும் பாலமாக மான்மின் துதிகள் விளங்குகின்றன.

மான்மின் துதிகள் தேவனுடைய அன்பை விசுவாசிகளுக்கு அருளுகிறது, அழகான பரலோகத்தின் நம்பிக்கையை தந்து, அவர்களின் இருதயங்களை சுத்திகரிக்கிறது. குறிப்பாக, இந்தப் பாடல்களில் மறு–சிருஷ்டிப்பின் வல்லமை அடங்கியிருப்பதால், சமாதானத்தையும் உணர்வையும் தருகிறது; இருளை அகற்றுகிறது; மனந்திரும்புதலுக்குள் வழிநடத்துகிறது; சுகத்தையும், பதில்களையும், ஆசீர்வாதங்களையும் தந்து, பிரச்சனைகளை தீர்க்கிறது.

சதாகாலங்களும் நம்முடைய துதிகளை ஏற்றுக்கொள்ள பாத்திரரான தேவனுக்கே சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன்.




### நான் பரலோகத்திற்கான நம்பிக்கையாலும் மகிழ்ச்சியாலும் நிறைந்திருக்கிறேன்!

“நான் மான்மின் பாடல்களை பாடும்போதெல்லாம் ஆண்டவருடன் மிக நெருக்கமாக இருப்பதாக உணருகிறேன். தேவ சித்தத்தின்படி வாழவும் அதிகமாய் உந்தப்படுகிறேன்.”

**சகோதரி எஸ்டெல்லா மெல்கர், கலிபோர்னியா மான்மின் ஊழிய மையம், USA**

“நான் மான்மின் பாடல்களை பாடினபொழுது தலைவலியிலிருந்தும், மனஅழுத்தத்திலிருந்தும் விடுதலைப் பெற்றுக்கொண்டேன். இப்பொழுது பரலோகநம்பிக்கையினால் நிறைந்திருக்கிறேன்!”

**சகோதரி ஜெடிடா வான்ஜிரு, நைரோபி மான்மின் பரிசுத்த ஆலயம், கென்யா**

“மான்மின் பாடல்களின் கலைநிகழ்ச்சிகளால் நான் உத்வே–கத்தையும், உணர்ச்சியையும் அனுபவித்து, தேவனுடைய வார்த்தையை அதிக ஆழமாய் புரிந்துக்கொண்டேன்.”

**போதகர் டிமிட்ரி பெட்ரோவ்ஸ்கை, இஸ்ரேல்**

### தேவனுடைய அன்பை நான் உணருகிறேன்!

“மான்மின் பாடல்களை பாடும்பொழுது தேவனுடைய பிரசன்னத்தை உணருகிறேன். இந்தியாவிலுள்ள என் ஜனங்களும், இந்த அன்பை அறிந்து, பரலோகம் செல்வார்கள் என்று நான் நம்புகிறேன்.”

**சகோதரர் ஜெயகுமார், சென்னை மான்மின் சபை, இந்தியா**

“மான்மின் பாடல்களை பாடும்போதும், வார்த்தை வார்த்தையாய் வரிகளை நினைக்கும்போதும், தேவன் என்னை எவ்வளவாய் நேசிக்கிறார் என்னை உணர்ந்து, அவரை போற்றுகிறேன்.”

**சகோதரி கலினா பிலமாடிலா, மல்டோவா மான்மின் சபை**

“உலக பாடல்களை அனுபவித்து கேட்பேன். ஆனால் மான்மின் பாடல்களின்மூலம் தேவஅன்பை உணர்ந்தேன். அவைகளிலிருந்து என்னை தூரப்படுத்திக்கொண்டு, மாற்றப்பட்டிருக்கிறேன்.”

**சகோதரி ரியு சுமிகா, டோக்கியோ மான்மின் சபை, ஜப்பான்**

### நான் சுகம், பதில், ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டேன்!

“ஒரு விபத்தினால் கேட்கும்திறனை இழந்தேன். ஆனால் நான் மான்மின் துதியை பாடினவேளையில், என்னுடைய வலது காது வழியாக கேட்க துவங்கினேன்; இப்பொழுது நன்றாகவே காது கேட்கிறது!”

**சகோதரி வெரிபென் நொக்சேங், பாங்காக், தாய்லாந்து**

“நான் மான்மின் துதிகளை பாடினபொழுது, என்னை துன்பப்படுத்தின என்னுடைய அப்பாவிற்காக ஜெபித்தேன். இப்பொழுது அவர் சந்தோஷமாய் சபைக்கு வருகிறார்!”

**சகோதரி நான்சி கபூர், டெல்லி மான்மின் சபை, இந்தியா**

“மான்மின் துதிகளை கேட்டபொழுது நான் மூட்டு வலியிலிருந்து சுகமானேன், என் மனைவி காயச்சலிலிருந்து சுகமானாள்!”

**கண்காணி க்யன் பஹதுர் ராய், நேபாள் மான்மின் சபை**



※ நேர்காணல் வரிசையின்படி புகைப்படங்கள் உள்ளன



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

# உண்மையுள்ள இருதயம் விசுவாசத்தின் பூரண நிச்சயம்

“துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட
இருதயமுள்ளவர்களாயும்,
சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட
சரீரமுள்ளவர்களாயும்,
உண்மையுள்ள இருதயத்தோடும்
விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும்
சேரக்கடவோம்”
(எபிரெயர் 10:22)

இன்றைய பகுதியிலே, அன்பின் தேவன் நாம் உண்மையுள்ள இருதயத்தையும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தையும் பெற வேண்டும் என்று நம்மை உந்துகிறார். இதன் காரணம் நாம் அதை அடையப்பெறும்போது நாம் அவருடைய மகத்தான அன்பை பெற்றுக்கொள்ள முடியும்.

அதனால், நாம் உண்மையுள்ள இருதயத்தையும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தையும் அடையப் பெறுவதற்கு எப்படி ஜெபிக்க வேண்டும், எதற்காக ஜெபிக்க வேண்டும்? வனாந்தரத்தில் 40 ஆண்டுகள் அலைந்த பின்னரும் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க முடியாமல் போன இஸ்ரவேலர்களின் மூலமாக நாம் இதைச் சிந்திப்போம்.

### 1. உண்மையுள்ள இருதயத்தையும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தையும் நாம் வாஞ்சிக்க வேண்டிய காரணம்

உண்மையுள்ள இருதயம் என்பது தூய்மையான பொய்கள் அல்லது மாறுதல் இல்லாத சத்தியமுள்ள இருதயத்தைக் குறிக்கிறது. இப்பேர்பட்ட உண்மையுள்ள இருதயத்தை நாம் வேளாண்மை செய்து பண்படுத்தும்போது பரத்திலிருந்து தேவனால் கொடுக்கப்படுகிற ஆவிக்குரிய விசுவாசமே, விசுவாசத்தின் பூரண நிச்சயம். அது அவருடைய இருதயத்தையும் சித்தத்தையும் புரிந்துக்கொண்டு அவருக்குக் கீழ்ப்படிவதால் தேவனைப் பிரியப்படுத்துகிற விசுவாசமாகும். அதாவது, இதுதான் உண்மையான விசுவாசம். இதிலே நீங்கள் தேவனை சந்தேகப்படவே மாட்டீர்கள்.

ஆதாம், ஜீவ ஆத்துமாவாக இருந்தபோது, ‘உண்மையுள்ள இருதயம்’ என்ற வார்த்தை அவசியமில்லாதிருந்தது. இதன் காரணம் அவன் இருதயம் தானே ஆவியாயிருந்தது. அவனுடைய இருதயம் சத்தியத்தின் பொருளடக்கங்களால் மட்டுமே நிறைந்திருந்தது. அதனால், அவன் தேவனுக்கு கீழ்ப்படிய மட்டுமே செய்தான். தேவனால் மிக ஆழமான நிலையின் அளவுக்கு மிகவும் நேசிக்கப்பட்டான். தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட அனைத்துக்கும் எஜமானாக ஆதாம் மிகப் பெரும் ஆஸ்தியையும் அந்தஸ்தையும் உடையவனாயிருந்தான். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, ஆவியாயிருக்கிற தேவனோடு அவனால் தொடர்புகொள்ள முடிந்தது.

ஆனால் அவன் பாவம் செய்ததிலிருந்து, சத்தியத்திற்குப் புறம்பான பொருளடக்கங்கள் அவன் இருதயத்தை நிரப்ப ஆரம்பித்தன. அவன் மாம்சத்திற்குரிய மனுஷனானான். அவன் இருதயம் சத்தியம் மற்றும் சத்தியத்திற்குப் புறம்பானவையான கலவையாயிற்று. அவன் முன்போல தேவனோடு இனி தொடர்பு கொள்ள முடியவில்லை. காலம் கடந்ததால், போகப் போக ஆதாம் சந்ததியினரின் இருதயங்கள் அதிகமதிகமாக சத்தியத்திற்குப் புறம்பானவையாலே கறைபடிந்தன. அவர்கள் தேவனை விட்டு அதிகமதிகமாக தூரமாயினர். மேலும், தேவனோடு தொடர்பு கொள்வதற்கு பதிலாக, அவர்கள் எதிராளியான பிசாசோடும் சாத்தானோடும் தொடர்பு கொள்ள ஆரம்பித்தனர்.

ஆனால் நன்றி சொல்லும் விதமாக, அன்பு நிறைந்த தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுவை தகப்பனுக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் இடையிலான உறவை திரும்ப பெற்றுக்கொள்ளும்படியாக நிவாரணபலியாக்கினார். மேலும், அவர் உதவியாளராம் பரிசுத்த ஆவியை அனுப்பினார். அதனால் மக்கள் தேவனை “அப்பா பிதாவே” என்று கூப்பிட முடிகிறது (ரோமர் 8:15). அவர் நாம் தேவனோடு உண்மையான அன்பை பகிர்ந்து சந்தோஷமான வாழ்வு வாழும்படியாக, உண்மையுள்ள இருதயத்தையும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தையும் பெறும்படி வழிநடத்துகிறார். இந்த உலக வாழ்வுக்காக, நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற அதிகாரத்தை அனுபவித்து, ஒன்றிலும் குறைவில்லாதவர்களாய் ஆதாம் ஒரு காலத்தில் இருந்ததுபோல நாமும் இருக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார். பிற்பாடு, பரலோக ராஜ்யத்தை சுதந்தரித்து, தேவனுடைய சிங்காசனமிருக்கிற புதிய எருசலேம் நகருக்கு நாம் வர விரும்புகிறார்.

### 2. உண்மையுள்ள இருதயத்தையும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தையும் நாம் அடைவதற்கு கருத வேண்டிய குறிப்புகள்

#### 1) இஸ்ரவேல் புத்திரர்களால் மாறுகிற மனநிலையை களைந்துப்போட முடியவில்லை.

எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்து கூக்குரலிட்டபோது தேவன் இஸ்ரவேல் புத்திரர்கள் மேலே மனதுருக்கத்தைக் காண்பித்தார். அவர் அவர்களை பார்வோனிடத்திலிருந்து விடுவித்து, பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்கு வழிநடத்தும்படியாக மோசேயையும் ஆரோனையும் அனுப்பினார்.

ஆனால் அவர்கள் எகிப்திலிருந்து வெளியே வந்தவுடனே, அந்த மக்கள் முறுமுறுக்கத் தொடங்கினர்; தொடர்ந்து முறுமுறுத்துக் கொண்டே இருந்தனர். தேவன் செங்கடலைப் பிளந்து உலர்ந்த தரையைப் போல அதை அவர்கள் கடக்கச் செய்தார். அவர்களை மன்னாவினாலும் காடைகளினாலும் போஷித்தார். ஆனால் அவர்கள் அற்புதத்தை கண்ட பிற்பாடு உடனே அவர்களது மனநிலை மாறியது, அவர்கள் முறுமுறுத்தார்கள். அவர்களுடைய மனம் எப்போதும் மாறிக் கொண்டேயிருந்தது. அவர்களால் உண்மையுள்ள தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்ப முடியவில்லை.

எனினும், மோசேயை கருதி, தேவன் அவர்கள் மேல் பொறுமையுள்ளவராயிருந்து வனாந்திரத்தில் 40 ஆண்டுகளுக்குப் பிற்பாடு அவர்களை கானான் தேசத்தின் நுழைவுக்கு வழிநடத்தினார். இந்த கனப்பொழுதிலும்கூட, அவர்கள் இன்னமும் முறுமுறுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அந்த தேசத்திற்குள் நுழைவதற்கு முன்னதாக, அநேக மக்கள் தங்கள் பாவத்தின்நிமித்தம் அர்த்தமற்ற மரணங்களைச் சந்தித்தனர். அவர்கள் வனாந்திரத்தில் கொள்ளி வாய் சர்ப்பங்களாலே கடிப்பட்டனர்.

நீங்கள் எண்ணற்ற அடையாளங்களையும், அற்புதங்களையும், வல்லமையான கிரியைகளையும் கண்டிருந்தாலும்கூட, உங்களுக்கு இன்னமும் மாறுகிற மனநிலையிருக்குமேயானால், உங்களால் ஆசீர்வாதங்களைப் பெற முடியாது. இதன் காரணம், இது நீங்கள் முறுமுறுக்கும் போது அல்லது உங்கள் மனநிலை அல்லது சூழ்நிலைக்கேற்ப மாறுகிற மனநிலையினிமித்தம் சமாதானத்தை உடைக்கும்போது உங்கள் பாத்திரங்களை கவிழ்த்துப்போடுவது போல உள்ளது, அது அந்தப் பாத்திரம் ஆசீர்வாதங்களைப் பெறக் கூடாதபடி செய்துவிடுகிறது. நீங்கள் இந்த மாறுகிற மனநிலையைக் களைந்துப்போடும்போது மட்டுமே உங்களால் உண்மையுள்ள இருதயத்தை அடையப் பெற முடியும். அதன்பின்பு, இருதயத்தின் ஆழத்திலிருந்து விசுவாசிக்கத்தக்க பூரண விசுவாசம் அளருப்படும்.

#### 2) முடிவுபரியந்தம் இஸ்ரவேலர்கள் உலகத்தை நோக்கிப் பார்த்தனர்.

தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களாக தேவன் இஸ்ரவேல் புத்திரர்களை தெரிந்தெடுக்கையில், அவர் அவர்களுக்கு கட்டளைகளைக் கொடுத்து தொடர்ந்து அவர்கள் அவைகளை கைக்கொள்ளும்படிக்கு உந்தினார். அவர் அவர்களுக்கு வார்த்தைகளை மட்டும் அப்படியே கொடுத்து விடாமல், அவர்களை அவர்கள் பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை அறிந்துக் கொள்ளச் செய்யுமாறு அவர்கள் தங்கள் பாவங்களுக்காக மிருகங்களை பலிகளாக கொடுக்கும்படிச் செய்தார். மேலும், தங்கள் சொந்த மக்களும் அயலகத்தாரும் வனாந்திரத்தில் அவர்கள் தங்கள் பாவங்களுக்காக தண்டனையாக கொல்லப்பட்டதைக் கண்டார்கள்.

எனினும், இஸ்ரவேல் புத்திரர்கள் சிலர் அவர்கள் கானான் தேசத்திற்குள் நுழைவதற்கு சற்று முன்னதாக, மோவாபிய ஸ்தீரிகளோடு வேசித்தனஞ் செய்தார்கள். அவர்கள் விக்கிரக ஆராதனை எனும் கலகச் செயலையும் செய்தார்கள். ஆகவே, 20,000க்கும் அதிகமானோர் வாதையினால் செத்தார்கள். கூடவே, கானான் தேசத்தைப் பிடிக்கையில், ஆகான் என்னும் பெயருள்ள ஒருவன் தன் பேராசையினாலே தேவனுக்குரிய சாபத்தீடானவைகளிலிருந்து திருடினான், அவன் கல்லால் எறியப்பட்டு கொல்லப்பட்டான்.

தேவன் இஸ்ரவேலருக்களித்த கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழுமையான தேசம். அதே நேரத்தில், அங்குள்ள மக்களால் பாவத்தினால் அது நிறைந்திருந்தது. ஆகவே அவர்கள் நியாயந்தீர்க்கப்பட வேண்டியிருந்தது. அவர்கள் ஒரு கனப்பொழுது கவனக்குறைவாக இருந்தாலும், அவர்கள் அந்தச் செழுமையில் மெத்தனமாகிவிடுவார்கள் அல்லது உலகச் சிற்றின்பங்களால் கறைப்படிந்து விடுவார்கள். இதன் காரணமாக, தேவன் இஸ்ரவேல் புத்திரர்களை வனாந்திரத்தில் நீண்ட காலமாக தம்முடைய பரிசுத்த ஜனங்களாகும்படிக்கு அவர்களை பயிற்றுவித்தார்.

அப்பேர்பட்ட சூழ்நிலையிலும்கூட உங்கள் இருதயம் தேவன் பேரில் வைக்கப்பட்டு, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளும் என்று நிச்சயமுள்ளவர்களாயிருக்கிறீர்களா? இப்போது, ஆண்டவருடைய நாமத்தில், நீங்கள் உண்மையுள்ள இருதயத்தையும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தையும் அடைவதற்கு இயல நீங்கள் உலகத்திற்கான உங்கள் அன்பை களைந்துப்போட்டு எல்லாவற்றிற்கும்மேலாக தேவனை நேசிக்கும்படியாக உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

#### 3) இஸ்ரவேலர்கள் தங்கள் அகந்தையினாலே முற்றிலுமான ஜெயம் பெற முடியவில்லை.

காலேப் முற்றிலுமாய் தேவனைச் சார்ந்துக் கொண்டான், தேவன் அவனுக்க கொடுப்பேன் என்று வாக்களித்த நிலத்தை அவன் எடுத்துக் கொண்டான். மாறாக, தாண் போன்ற சில கோத்திரத்தார்கள் தங்கள் சுய முறைமைகளையும் பெலனையும் சார்ந்துக்கொண்டார்கள். அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பகுதிகளை அவர்களால் முற்றிலுமாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. யோசுவாவும்கூட, மோசேயின் ஸ்தானத்தில் வந்தவர். தேவனுடைய சித்தத்தைக் கேட்டபோது செழித்தோங்கினார். ஆனால் அவர் தேவசித்தத்தைக் கேட்காதபோது, கானானியரால் அவர் வஞ்சிக்கப்பட்டார் (யோசுவா 9).

அகந்தை ஒருவருடைய மனதில் மிக ஆழமான வேர் கொண்டிருக்கும். ஆக, அதைக் களைந்துப் போடுவதற்கு நீங்கள் தாழ்மையாக தேவனைச் சார்ந்துகொண்டு உண்மையுள்ள இருதயத்தை அடையப்பெற வேண்டும். நீங்கள் தேவனுடைய வார்த்தையினாலும், ஜெபத்தினாலும் உங்களை தரிப்பித்துக்கொண்டு, தேவனுடைய வல்லமையை சார்ந்துக்கொள்வதால், நீங்கள் உங்கள் மனதில் உணர கடினமாயுள்ள துர்மனச்சாட்சியையும், உங்கள் சுபாவத்தில் மிக ஆழமாக வேரூன்றியுள்ள தீமையையும்கூட கண்டறிந்து, அவைகளைப் பிடுங்கி எறிந்துவிட முடியும். வெளியரங்கமான தீமைகளை சொல்ல வேண்டிய அவசியமில்லை (எபிரெயர் 10:22).

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, உண்மையுள்ள இருதயத்தை வேளாண்மை செய்து, பண்படுத்தி, விசுவாசத்தின் பூரண நிச்சயத்தை பெறுவதற்கு நாம் நம்முடைய இருதயத்தை விருத்தசேதனம் செய்ய வேண்டும். எப்படி மீண்டும் சீக்கிரம் அசுத்தமாகும் நுனித்தோலை வெட்டிப் போடுகிறோமோ அது போல நாம் பாவத்தினாலும் தீமையினாலும் எளிமையாக அசுசிப்படுகிற இருதயமாகிய நுனித்தோலை வெட்டி எறிய வேண்டும் (எரேமியா 4:4). விருத்தசேதனம் பண்ணப்பட்ட இருதயத்தில் நாம் சத்தியத்தைப் போடுவோமானால், நாம் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தை கொண்டிருக்க இயன்று எதைக்கேட்டால் நாம் பெற்றுக்கொள்வோம். இப்படிச் செய்வதால் நீங்கள் மெய்யான சந்தோஷத்தை என்றென்றும் அனுபவிக்கும்படி ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன்.

**விசுவாசத்தின் அறிக்கை**

1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.
2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்
3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.
4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை “அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்” மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.

“எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]...” [அப். 17:25]

“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” [அப். 4:12]

# மெய்யான கீழ்ப்படிதல்

இயேசுவானவர் இரட்சிப்பின் அநாதி திட்டத்திற்காக, சிலுவையிலே மரிக்கும்பரியந்தம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தார். இயேசுவானவரால் அப்படி செய்ய முடிந்தது காரணம், அவர் பிதாவாகிய தேவனை நேசித்ததால். அவர் தேவனை நேசித்ததால், தன்னைத்தான் தாழ்த்தி, அவர் கீழ்ப்படிந்தார். மகிழ்ச்சியோடு சிலுவையின் அநாதி திட்டத்தை நிறைவேற்றினார். நாமும்கூட கடைசி காலத்திற்கான தேவனுடைய அநாதி திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, நாம் தேவனுடைய சித்தித்தை சரியாகப் புரிந்துக்கொண்டு அதற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

### முதலாவதாக, நாம் நம்முடைய நான் என்னும் அகங்காரம் அல்லது 'சுயம்' கொண்டிருக்கக்கூடாது. தேவனை மட்டுமே நம்மில் கொண்டிருக்க வேண்டும்.

தேவனை நேசிக்கிறவர்கள் அவருக்கு கீழ்ப்படிய விரும்ப வேண்டும். அவர்கள், தேவனே, நான் உம்மை நேசிக்கிறேன்'' என்று சொல்லுவார்கள். ஆனால் அவர்களது கிரியைகள் சில நேரம் கீழ்ப்படியாமைகளுக்கு வழிநடத்தும். அவர்கள் தங்களுக்குள் ''சுயம்'' கொண்டிருப்பதே காரணம்.

இதன் அர்த்தம் அவர்கள் சில குறிப்பிட்ட வேலைகளைச் செய்யும்போது, அவர்கள் தங்கள் சொந்த எண்ணங்களை, ஞானத்தை, மற்றும் முறைகளை பயன்படுத்துகின்றனர். அவர்கள் எது சரி என்று நினைக்கிறார்களோ அதையே வலியுறுத்துகின்றனர். உண்மையில், அவர்களுக்கு எது விருப்பமோ அதையே செய்வார்கள், ஆனாலும் அவர்கள் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதாக இன்னமும் நினைத்துக் கொண்டிருப்பார்கள். இது பொதுவாக அவர்கள் தேவனுடைய இருதயத்தை அறிந்து புரியாதபோது நடைபெறுகிறது.

முடிவுகள் திருப்தியாக இல்லையெனில் அல்லது பாராட்டை அல்லது அங்கீகாரத்தைப் பெறாதபோது, அவர்கள் பிறரை பழிசாட்ட ஆரம்பிப்பார்கள், தங்களை அல்ல. உண்மையில், இதன் காரணமாகவே அவர்கள் தங்கள் குறைவுகளை கண்டறியத் தவறிவிடுகின்றனர். அவர்கள் தவறுதலாக தங்களுக்கு விசுவாசம் உள்ளது எனவும், தேவனளித்த கடமைகளை சரியாய் நன்றாய்ச் செய்கிறோம் என்று நினைத்து மெத்தனமான மனப்பான்மையோடு தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிகிறோம் என்று நினைக்கிறபடியால் தோல்வி ஏற்படுகிறது.

◆

ஆனால் இயேசுவானவருக்கு எந்த ஒரு சுயம் அல்லது நான்தான் என்ற அகங்காரம் ஏதுமில்லை. அவர்தம் இருதயத்தில் பிதாவாகிய தேவனை மட்டுமே கொண்டிருந்தார். அதனால் அவர் தனது சுய விருப்பம் ஏதுமே இல்லாமல், பிதாவின் விருப்பத்தை மட்டுமே பின்பற்றினார். அவர் தனது பொது ஊழியத்தின் வேளையிலும்கூட எப்போதும் ஜெபித்து பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை தேடினார். அவர்தம் ஊழியத்தில் ஒவ்வொன்றும் தேவனுடைய வார்த்தையோடு பூரணமாக இசையும்படியாக கீழ்ப்படிந்தார் (சகரியா 9:9, மத்தேயு 21:2–7). மேலே விளக்கப்பட்டபடியே, இயேசுவானவர் தேவனுடைய சித்தத்திற்கு மட்டுமே கீழ்ப்படிந்து எந்த ஒரு சிறு பிழையும் இல்லாதவாறு சிலுவையின் இரட்சிப்பின் அநாதி திட்டத்தை நிறைவேற்றினார்.

நாமும்கூட நம்முடைய ''சுயத்தை'' மறுதலித்து, அப்போஸ்தலனாகிய பவுல் ''நான் அநுதினமும் சாகிறேன்'' என்று 1 கொரிந்தியர் 15:31 சொன்னது போல அதைச் சாகடிப்போம்.

### நிபந்தனையில்லாத இருதயம் நமக்கு இருக்க வேண்டும்.

சில மக்கள் ஒவ்வொரு காரியத்திலும் நிபந்தனைகளைக் குறித்து யோசிப்பார்கள். அவர்கள் தங்கள் மன விருப்பதின்படியும் சுயநல மையமான நோக்கங்களின் படியும் தங்களுக்கு ஆதாயமானவற்றை தெரிந்தெடுப்பார்கள். மேலும் அவர்கள் எந்த நேரத்திலும் தங்கள் மனப்பான்மையை மாற்றிக்கொள்வார்கள். அவர்களுக்கு ஆதாயமாக இருக்கும்போது அவர்கள் கீழ்ப்படிவார்கள். ஆனால் அது ஆதாயமில்லாதபோது சாக்குபோக்குகள் சொல்லி கீழ்ப்படிய மாட்டார்கள்.

ஆனால் உண்மையான கீழ்ப்படிதல் என்பது உங்களது ஆதாயத்தைக் குறித்து அல்ல. அது சூழ்நிலைகளை குறித்தோ அல்லது நிஜமானவைகளை குறித்தோ சாக்குப்போக்கு சொல்ல நினைப்பது அல்ல. நீங்கள் தேவனுடைய சித்தம் எதுவோ அதை மட்டுமே கருத்தில் எடுத்துக்கொள்வீர்கள். நீங்கள் நிபந்தனையில்லாமல் எந்த ஒரு சூழ்நிலையிலும் அது தேவனுடைய சித்தமாயிருக்குமேயானால் கீழ்ப்படிவீர்கள்.

◆

மத்தேயு 19 ஆம் அதிகாரத்தில், ஒரு ஐசுவரியவான் ஒருவன் இயேசுவினிடத்தில் வந்து, அவரிடத்தில், ''நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும்?'' என்று கேட்டான். ஆனால் அவன் இயேசுவினிடத்தில் கேட்க விரும்பிய பிரதியுத்திரத்தை அவனால் பெற முடியவில்லை. பின்பு, அந்த ஐசுவரியமுள்ள வாலிபன் துக்கமடைந்தவனாய் போய்விட்டான். அவன் இயேசுவினிடத்தில் வந்தபோது நல்ல நோக்கத்தோடு வந்தான், ஆனால் அவன் தன் சுய வரம்புகளுக்கு உட்பட்டு மட்டுமே கீழ்ப்படிய மனதாயிருந்தான். ஆக, இறுதியில் அவன் தன் சுய லாபத்தை பின்பற்றினான்.

நீங்கள் உங்கள் தனிப்பட்ட புகழ், அதிகாரம் அல்லது மற்றேதும் சுய நல மையமான விளைவுகளுக்காக கீழ்ப்படிந்ததில்லையோ அல்லது நீங்கள் உங்கள் யோசனையோடு ஒத்துப்போகிறதற்கும் உங்களுக்கு ஆதாயமானதற்கு மட்டுமே கீழ்ப்படியவில்லையோ? நீங்கள் முடிவு பரியந்தமும் எந்த ஒரு சூழ்நிலையிலும் தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிய வேண்டும். நீங்கள் உண்மையில் கீழ்ப்படிய விரும்பினால், நீங்கள் முடிவு பரியந்தமும் மகிழ்ச்சியோடு தேவனுக்குக் கீழ்ப்படிய முடியும்.

இயேசுவானவர் தன் சுய மகிமையை ஒருபோதும் தேடவில்லை; அவர் தேவனுடைய மகிமைக்காகவே கீழ்ப்படிந்தார். அதனால்தான் அவர் மகிமையான பரம சிங்காசனத்தை விட்டு, இந்தப் பூமிக்கு வந்து, பயங்கர கொடிய குற்றவாளியைப்போல நடத்தப்பட்டு சிலுவையியே மரித்தார். அவருடைய அன்பையும் கீழ்ப்படிதலையும் உணருவதால், தேவன் செய் என்று நமக்கு கட்டளையிடுகிற வைகளுக்கு வெளிப்படையாக மட்டுமல்ல, அவரது இருதயத்தையும் சித்தத்தையும்கூட தெளிவாக புரிந்துக் கொண்டு கீழ்ப்படிய வேண்டும்.

### நமக்கு ஆவிக்குரிய அன்பின் கனி இருக்க வேண்டும்.

இயேசு சிலுவையிலே தொங்கிக் கொண்டிருந்த போது, அவருடைய சீஷர்களில் முக்கால்வாசி பேர் பயந்து ஓடிப்போய்விட்டனர். ஆனால் மகதலேனா மரியாள் உட்பட சில ஸ்திரீகள் முடிவுபரியந்தம் ஆண்டவருடனே இருந்தனர். அவர்கள் அவரை அந்த அளவு அதிகமாக நேசித்தனர், அவர்கள் எந்த ஆபத்தைக் குறித்தும் பயப்படவில்லை.

நீங்கள் தேவனையும் ஆண்டவரையும் நேசிப்பீர்களானால், நீங்கள் உங்கள் ''சுயத்தை'' சாகடித்து விட முடியும். உங்கள் சூழ்நிலைகளைக் குறித்து யோசிக்க மாட்டீர்கள். இப்பேர்பட்ட அன்பு இல்லாமல், உங்களால் ஆவிக்குரிய விசுவாசத்தைப் பெற முடியாது. மேலும் உங்களால் தேவனுடைய சித்தத்தை பயிற்சி செய்ய முடியாது. பரலோகத்தின் நம்பிக்கையும் உங்களுக்கு இருக்காது.

இயேசுவானவர் தேவனை மிக அதிகம் நேசித்தபடியால், அவர் தேவனை நம்பினார். தேவனோடு பரலோகராஜ்யத்தில் அவர் அனுபவிக்கப்போகிற மகிமையான நாட்களை எதிர்நோக்கினார். நீங்களும்கூட உண்மையாக தேவனை நேசித்தால், நீங்கள் தேவனை விசுவாசிப்பீர்கள், பரலோக ராஜ்யத்தில் நீங்கள் கொண்டிருக்கப் போகிற நாட்களுக்காக எதிர்நோக்குவீர்கள். அப்போது உங்களால் எந்தக் காரியத்திற்கும் கீழ்ப்படிய முடியும்; நித்திய ஜீவனையும்கூட பெற்றுக்கொள்வீர்கள்.

◆

அப்போஸ்தலனாகிய பவுலின் அறிக்கை அவர் எந்தளவாய் தேவனை நேசித்தார் என்பதை காட்டுகிறது. அவர் ரோமர் 8:35–39ல், ''உமதுநிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுனைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்'' என்று கூறினார்.

ஆக, உண்மையான கீழ்ப்படிதல் என்பது அப்பேர்பட்ட ஆழமான ஆவிக்குரிய அன்பிலிருந்து வருகிறது என்பதை நினைவுகூர்ந்து, அபரிதமான ஆவிக்குரிய அன்பின் கனியை விளைவியுங்கள்.

# “என் 3 வயது மகன் திரும்பவும் உயிர்பெற்றான்!”



**கண்காணியை ஜிசு ஓ, வயது 26, மாகாணம் 2, மான்மின் தலைமை சபை**



ஜனவரி 2 அன்று, மதியம் 2.45 மணிக்கு எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. என் இளைய மகன் ஈச்சன் (வயது 3) மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் இருப்பதாக கேள்விப்பட்டேன். குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தில் காலையிலிருந்தே அவன் பெலனில்லாமல் இருந்ததாகச் சொன்னார்கள். அவன் காலையில் சாப்பிடவில்லை, அப்படியே தூங்கிவிட்டான். மதிய வேளையில், அவன் விழித்துக்கொண்டபோது, திடீரென்று தூக்கி எறியப்பட்டான். அவனை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியிலேயே அவனுடைய சுவாசம் நின்றுபோனது.

**நேரம், இடத்தைத் தாண்டி கிரியை செய்த ஜெபத்தினால், அவன் இயல்பாக சுவாசிக்கத் தொடங்கினான்.**

நான் மருத்துவமனைக்கு டாக்ஸியில் செல்லும்போது, தேவனிடத்தில் அவனை பிழைக்கப்பண்ணும் என்று ஜெபித்தேன். நான் அங்குச் சென்றபொழுது, அவன் சுவாசம் அவனுக்குள் மீண்டும் வந்திருந்தது. ஆனால் அவனால் இயல்பாக சுவாசிக்க முடியவில்லை. சுவாசக்கருவியை 100 சதவீதம் சார்ந்தே அவன் உயிர் இருந்தது. தன்னுடைய ஜெபமலை வீட்டில் ஜெபிக்கின்ற தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களிடம் நாங்கள் ஜெப விண்ணப்பத்தை அனுப்பினோம். மாலை ஏழு மணிக்கு தலைமை போதகர் என் மகனுக்காக ஜெபித்துவிட்டார் என்ற செய்தியை கேட்டேன். அதுமுதற்கொண்டு, ஈச்சன் தொடர்ச்சியாக இயல்பாக சுவாசிக்கத் தொடங்கினான்.

அவனுக்கு மாரடைப்பு (கார்டியாக் அரஸ்ட்) ஏற்பட்டு, மருத்துவ–மனைக்கு வரும் வரை இருபது நிமிடங்களுக்கும் மேலாக மூச்சு நின்றுபோயிருந்த காரணத்தால், அவன் உணர்வற்ற நிலைக்கு தள்ளப்பட அதிகமான வாய்ப்புகள் இருப்பதாக மருத்துவர் சொல்லிவிட்டார். அவர் ஒரு வேளை அவன் விழித்துக்கொண்டாலும் இயல்பான ஒரு வாழ்க்கையை வாழ இயலாது என்று கூறினார்.

**மாரடைப்பு ஏற்பட்டு 20 நிமிடங்களாக சிகிச்சை எதுவும் அளிக்கப்படாத பொழுதும், அவனுடைய மூளையில் எவ்வித பாதிப்பும் இல்லை என அவனுடைய மூளை பரிசோதனை காண்பித்தது.**

மாரடைப்பு ஏற்பட்டு இருதயத் துடிப்பு நின்றுப்போன ஒரு நோயாளிக்கு, அது ஏற்பட்ட 4 நிமிடத்திற்குள்ளாக அளிக்கப்படும் முதலுதவியைப் பொறுத்தே வாழ்வா சாவா தீர்மானிக்கப்படும். இதைத்தான் ‘பொன்னான நேரம்’ என்று அழைக்கிறோம். குறிப்பிட்ட நேரத்திற்குள் முதலுதவி அளிக்கப்படாவிட்டால், அது மரணத்திற்கு நடத்திவிடும். ஒருவேளை எப்படியோ நேரம் கடந்தபின்னும் நோயாளி பிழைத்துவிட்டால், அவருடைய மூளையில் பாதிப்பு ஏற்படுவது உறுதி. ஈச்சன் 20 நிமிடங்களுக்குப் பின்பு தான் சிகிச்சையை பெற்றான். ஆனாலும், அவன் தலைமை போதக ருடைய வல்லமையான ஜெபத்தைப் பெற்ற–தால், அவனுடைய மூளை பரிசோதனை எந்த ஒரு பிரச்சனையும் இல்லை என காண்பித்தது; மருத்துவர்கள் அவன் ஒரு அதிர்ஷ்டசாலி என்றனர். ஒவ்வொரு நாளும் தேர்ச்சி பெற்றான், நான் தேவனுக்கு மிகுந்த நன்றி யோடு இருக்கிறேன்.



அவன் பல்வேறு பரிசோதனைகளுக்குள்ளாக கடந்துச் சென்றான். அவனுக்கு கவாசாகி நோயினால் கடுமையான மாரடைப்பு ஏற்பட்டது கண்டறியப்பட்டது. கவாசாகி நோய் என்பது உடம்பில் உள்ள இரத்தத் தட்டுகள் பாதிப்புக்குள்ளாவதால் உண்டாகும் நோயாகும். இதற்கான முக்கிய அறிகுறி, ஐந்து நாட்களுக்கும் மேலாக காய்ச்சல் தொடரும், பிறகு இருதயத்தில் உள்ள இரத்தத் தட்டுகளில் பாதிப்பை கொண்டு வந்துவிடும். மேலும் அது இருதயத்தின் இரத்தத் தட்டுகளை அடைக்கும் இரத்த உறைவை ஏற்படுத்தி, மரணத்திற்கு வழிநடத்திவிடும். அவனுடைய மருத்துவர், “அவனுடைய இருத யத்தின் சில தமனிகள் அடைக்கப்பட்டுள்ளது. சில இரத்தத் தட்டுப் பகுதிகள் பலூனைப் போல வீங்கியிருப்பதால், ஒருவேளை அவை வெடித்துவிட்டால் அவனுக்கு மரணம்தான்” என்று சொன்னார்.

**உயிருக்கு உத்தரவாதமில்லாத கடுமையான மாரடைப்பின் மத்தியிலும் அவன் துரிதமாய் புதுப்பிக்கப்பட்டான்.**

அவனுக்கு அறுவைச் சிகிச்சை அளிக்க முடியாத அளவிற்கு அவன் ஒரு சிறு பையன். எனவே மருந்துகளால் அவனுடைய நிலைமையை சரிசெய்ய முயற்சித்தனர். அவனுடைய இருதயத்தின் தமனிகளில் மிகவும் திடமாக இருந்த இரத்த உறைவை நீக்கும்படிக்கு, ஜனவரி 3ம் தேதி இரவு முதல், 4ம் தேதி காலை வரைக்கும் அவனுக்கு மருந்தை கொடுத்து வந்தனர். அஜீரணத்தால் மரணம் ஏற்பட வாய்ப்பிருந்தது, அப்படியில்லையேல் மூளையில் பக்க விளைவுகள் ஏற்பட வாய்ப்பும் இருந்தது; ஆனாலும் தேவன் அவனைப் பாதுகாத்து கொண்டார்.

மருத்துவர், எங்களிடம் அவனுடைய கடைசி தருணத்திற்காக ஆயத்தப்படுங்கள், அது நாளையாக கூட இருக்கலாம் என்று சொல்லிவிட்டார். அவன் எந்த நேரத்திலும் மரித்துப்போகலாம் என்பதற்காக அப்படிச் சொன்னார். ஆனால் அவனோ ஒவ்வொரு நாள் கடக்க கடக்க ஆரோக்கியத்தைப் பெற்றுக்கொண்டான். அவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நாளிலிருந்து நான்காவது நாளான ஜனவரி 6 அன்று, அவனுக்கு ஆக்ஸிஜன் கருவி தேவைப்படவில்லை; தண்ணீரை பருகத் தொடங்கினான்.

ஜனவரி 7ம் தேதி ஞாயிறு, அவன் உட்கார்ந்தான். ஞாயிற்றுக் கிழமை மாலை ஆராதனைக்குப் பிறகு தலைமை போதகர் அவனுக்காக மறுபடியும் ஜெபித்தார். அதன்பிறகு, “அம்மா! அப்பா! பாட்டிம்மா!” என்று எங்களை கூப்பிடத் தொடங் கினான். எங்களோடு கொஞ்சி விளையாடத் தொடங்கினான். அவனுடைய சுவாசம் 100 சதவீதம் இயல்பானது. அவனுடைய இருதய பரிசோதனை மற்றும் கல்லீரல் பரிசோதனையில் எந்தப் பிரச்சனையும் இல்லை என்று கண்டறியப்பட்டது. ஒரு வாரத்திற்குள்ளாக அவன் அவரச சிகிச்சைப் பிரிவிலிருந்து சாதாரண வார்டுக்கு மாற்றப்பட்டான். அவன் முன்பைப் போல பிரகாச முகத்தோடு, சந்தோஷம் நிறைந்தவனாக காணப்பட்டான்.

இந்த சம்பவம் என்னிலும் என் கண–வரிடத்திலும் பெரிதானதொரு மாற்றத்தைக் கொண்டு வந்தது. நாங்கள் எங்கள் விசுவாச ஜீவியத்தில் இனியும் வெதுவெதுப்பான நிலையில் இல்லை; தானியேல் ஜெபக்கூட்டத்தில் பங்குப்பெற துவங்கினோம். என் கணவர் தேசங் ஓ, குடிப்பது, புகைப்பிடிப்பது மற்றும் கேம்ஸ் விளையாடுவதை விட்டுவிட்டார். இப்பொழுது அவர் கர்த்தருடைய நாளை முழுமையாக கைக்கொள்கிறார்; தேவனிடத்திலிருந்து நாங்கள் பெற்ற கிருபையை பிறரோடு பகிர்ந்துகொள்ள ஒவ்வொரு கூட்டங்களிலும் பங்குப்பெறுகிறார். ஜீவனுள்ள தேவனுக்கு சகல நன்றிகளையும் மகிமையையும் நாங்கள் செலுத்துகிறோம். அன்போடு ஜெபித்த தலைமை போதகருக்கும் எங்கள் நன்றிகளை தெரிவிக்கிறோம்.

# “என் குடும்பம் பிசாசு பிடியிலிருந்தும், வியாதிகளிலிருந்தும் விடுதலைப் பெற்றது!”

**கண்காணி ரோக்சன் சைமன், வயது 41, மதுரை மான்மின் சபை, இந்தியா**

நான் சிறுவனாய் இருந்தபோது காலில் ஏற்பட்ட காயத்தால் வேதனையோடு வாழ்ந்து வந்தேன். 2004ம் ஆண்டு முதல் சுருள்சிரை நாளம் என்ற வியாதியினால் அவதிப்பட்டு வந்தேன். பாரமான பொருட்களை தூக்கவும், இருபது நிமிடங்களுக்கு மேல் நிற்கவும் கஷ்டப்பட்டேன்.

நான் சுகத்தைப் பெற்றுக்கொள்ள என் மனைவியும், மாமியாரும் அநேக இந்து கோயில்களுக்கு சென்றனர், ஆனாலும் பயன் எதுவும் ஏற்படவில்லை. 2008ம் ஆண்டு, என் மனைவி எங்கள் இரண்டாம் மகனை கர்ப்பத்தில் சுமந்துகொண்டிருந்தபோது, என்னுடைய சுகத்திற்காக மந்திர பூஜைகள் செய்தாள். ஆனால், அதன்பிறகுதான் அவள் வினோதமாக நடந்துக்கொள்ள துவங்கினாள். அவள் திடீரென விழுந்தாள், வாந்தி எடுத்தாள்; அவள் அசுத்த ஆவியால் பிடிக்கப் பட்டிருக்கிறாள் என்பது பின்புதான் தெரிந்தது. ஏப்ரல் 2010ல் என் குடும்பம் வேறொரு இடத்திற்குச் சென்று குடியேறினோம்.

ஒரு நாள், என் மூத்த மகன் சரும அழற்சியிலிருந்து சுகமடைந்தான். அவன் எங்கள் வீட்டிற்கு அருகாமையில் இருந்த சபைக்குச் சென்று, அங்கே மான்மின் தலைமை சபையின் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் ஜெபித்துக் கொடுத்த கைக்குட்டையின் ஜெபத்தைப் பெற்றுக்கொண்டதால் சுகமடைந்தேன் என்று சொன்னான் (அப். 19:11–2).

அவனைப் பின்தொடர்ந்து நாங்களும் மதுரை மான்மின் சபையில்



பங்குப்பெற துவங்கினோம். போதகர் ஜோசப் ஹான் (சென்னை மான்மின் சபை) நம் சபைக்கு வந்து, சுகமளிக்கும் கைக்குட்டை கூட்டத்தை நடத்த இருக்கிறார் என்று போதகர் பெர்சியாள் ராஜதுரை சொன்னார். அவர் ஜெபத்தினால் என் மனைவி சுகமடைவாள் என்று சொன்னார். அவள் போதகர் ஜோசப் ஹான் அவர்களின் ஜெபத்தைப் பெற்றபோது ஒரு அசுத்த ஆவி அவளிடமிருந்து வெளியேறியது. போதகர் ஹான் தானியேல் ஜெபக்கூட்டத்திற்கு வந்து ஜெபிக்கும்படி எங்களிடம் சொன்னார். அதுமுதற்கொண்டு, என் குடும்பம் ஒவ்வொரு நாளும் ஜெபக்கூட்டத்தில் பங்குப்பெற்று, போதகர் பெர்சியாள் ராஜதுரை அவர்களிடமிருந்து கைக்குட்டை ஜெபத்தைப் பெற்றுக் கொண்டோம். பிறகு, அவளுக்குள் இருந்த அசுத்த ஆவிகள் ஒன்றன்பின் ஒன்றாக வெளியேறின; அவள் பூரண சுகத்தைப் பெற்றுக்கொண்டாள். அல்லேலூயா!

ஆகஸ்டு 2017ல், நான் கொரியாவிற்குச் சென்று, மான்மின் கோடை முகாமில் பங்குப் பெற்றேன். நான் வியாதியஸ்தர்களுக்கான தலைமை போதகரின் ஜெபத்தைப் பெற்றபொழுது, 13 வருடங்களாக என்னை வேதனைப்படுத்தி கொண்டு வந்த என் இடது காலில் இருந்த சுருள்சிரை நாளங்களிலிருந்து சுகத்தைப் பெற்றுக்கொண்டேன். ஒருமுறை என் இரண்டாவது மகன் தூங்கும்போது திடீரென பக்கவா–தத்தினால் விரைத்த நிலைக்குப் போய்விட்டான். ஆனால் கைக்குட்டை ஜெபத்திற்குப் பிறகு சுகமடைந்தான். என் முழு குடும்பமும் வல்லமையான கிரியைகளை அனுபவித்தது; பரலோகத்திற்கான நம்பிக்கையோடு வாழ்ந்து வருகிறது. ஒரு சந்தோஷமுள்ள வாழ்க்கையை வாழும்படி எங்களை ஆசீர்வதித்த தேவனுக்கு சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன்.

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com